பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

20 05 2026 WEDNESDAY 7 15 PM ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. எந்தவொரு பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. வளரிளம் பெண்களுக்கென தேசிய இயக்கத்தை தொடங்கியதில் இந்தியா முன்னணியில் உள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகள் நலனுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

4. உலக தேனீக்கள் தினம் இன்று கொண்டாடப்பட்டது.

5. ஆசிய ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Dhairya Gogia இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

இத்தாலி அதிபர் திரு. Sergio Mattarella-வுடன் நடத்திய பேச்சுக்கள் ஆக்கபூர்வமாக அமைந்ததாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அரசுமுறைப் பயணமாக இத்தாலி சென்றுள்ள அவர், அந்நாட்டு அதிபருடன் இன்று ரோமில் பேச்சு நடத்தினார்.

பின்னர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில். இருநாடுகளுக்கு இடையேயான நல்லுறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து இந்த பேச்சுக்களின் போது விரிவாக விவாதிக்கப்பட்டதாக கூறியுள்ளார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், அரியவகை கனிமங்கள், விண்வெளி, அணுசக்தி போன்ற துறைகளில் இணைந்து செயல்படுவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாக பிரதமர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்தும், இரு தலைவர்களும் விவாதித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனைத் தொடர்ந்து, இத்தாலி பிரதமர் திருமதி. Georgia Meloni-யுடனும் திரு. நரேந்திர மோடி பேச்சு நடத்தினார்.

பின்னர் இரு தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களிடம் பேசினர்.

மேற்காசியா மற்றும் யுக்ரைனில் நிலவும் பதற்றத்தை தணிப்பதற்கு தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

எந்தொரு பிரச்சினைக்கும் பேச்சுவார்த்தை மூலமாக மட்டுமே தீர்வு காணப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு என்றும் திரு. நரேந்திர மோடி தெளிவுபடுத்தினார்.

இத்தாலி - இந்தியா கலாச்சாரம் மற்றும் சுற்றுலாவிற்கான ஆண்டாக, அடுத்த ஆண்டை கொண்டாடுவதென இந்த பேச்சுக்களின் போது தீர்மானிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

மனிதநேயத்திற்கு அச்சுறுத்தலாக தீவிரவாதம் உருவெடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

தீவிரவாத செயல்களை கண்டிப்பதோடு மட்டுமின்றி, அதற்கான நிதி ஆதாரங்களை தடுப்பதும் பொறுப்பான அரசுகளின் கடமையாகும் என்று அவர் தெரிவித்தார்.

இருநாடுகளுக்கு இடையேயான நல்லுறவை மேலும் மேம்படுத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

>>>>><<<<<

மேற்காசியாவில் நிலவும் பதற்றம் காரணமாக, எந்தவொரு சூழலையும் எதிர்கொள்ள தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

இன்று ராஞ்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த பிரச்சினையின் தாக்கம் காரணமாக, பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படக்கூடாது என்பதற்காக, அனைத்து துறைகளும் திட்டங்களை வகுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

>>>>><<<<<

இளநிலை மருத்துவ படிப்பு மாணவர் சேர்க்கைக்கான நீட் மறுதேர்வு, பாதுகாப்பாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் நடைபெறுவதை உறுதி செய்யுமாறு மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இன்று இதுதொடர்பாக நடைபெற்ற உயர்நிலை ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்று அவர் பேசினார்.

போட்டித் தேர்வுகள் தொடர்பாக சமூகவலைதளங்களில் தவறான தகவல்கள் பரப்பப்படுவதை தடுப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார்.

>>>>><<<<<

வளரிளம் பெண்களுக்கென தேசிய இயக்கத்தை தொடங்கியதில் இந்தியா முன்னணியில் உள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

அரசுமுறைப் பயணமாக சுவிட்சர்லாந்து சென்றுள்ள அவர், தாய்சேய் நலத் திட்டத்திற்கான வாரியத்தின் தலைவர் திருமதி. Helen Clerk-குடன் இன்று ஜெனீவாவில் நடத்திய பேச்சுக்களின் போது இதனை தெரிவித்தார்.

தாய்சேய் இறப்பு விகிதமும் இந்தியாவில் வெகுவாக குறைந்துள்ளதாக அவர் கூறினார்.

பொதுசுகாதாரத் துறையில் படைக்கப்பட்ட சாதனைகளையும் அவர் பட்டியலிட்டார்.

மகளிர், குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினரின் சுகாதாரத்திற்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்துள்ளதாகவும் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்தார்.

>>>>><<<<<

மாற்றுத் திறனாளிகள் நலனுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக சமூகநீதித்துறை இணையமைச்சர் திரு. ராம்தாஸ் அத்வாலே கூறியுள்ளார்.

இன்று கோவாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாற்றுத்திறனாளிகள் நலனுக்கான எந்த திட்டத்திற்கும் உதவிட மத்திய அரசு தயாராக உள்ளதாக கூறினார்.

மாற்றுத் திறனாளிகளுக்கென அரசு பள்ளி ஒன்று கோவாவில் செயல்பட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டினானர்.

இதன் மேம்பாட்டிற்கு தேவையான உதவிகளையும் வழங்க மத்திய அரசு தயாராக இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<<

முக்கிய துறைகளின் வளர்ச்சி கடந்த மாதம் ஒன்று புள்ளி ஏழு சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

சிமெண்ட் உற்பத்தி 9 புள்ளி நான்கு சதவீதம் அளவிற்கும், எஃகு உற்பத்தி 6 புள்ளி இரண்டு சதவீதம் அளவிற்கும் வளர்ச்சி கண்டுள்ளதாக தொழில்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மின்உற்பத்தியும் 4 புள்ளி ஒரு சதவீதம் அளவிற்கு அதிகரித்துள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற உறுதியுடன் குடிமைப்பணி அதிகாரிகள் பணியாற்ற வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டுள்ளார்.

இன்று புதுதில்லியில் தம்மை சந்தித்த இளம் குடிமைப்பணி அதிகாரிகளிடையே கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

மக்கள் நலனுக்கு உயர் முன்னுரிமை அளித்து, அதன் அடிப்படையில் அதிகாரிகள் முடிவெடுக்க வேண்டும் என்றும் குடியரசுத் தலைவர் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

உலக தேனீக்கள் தினம் இன்று கொண்டாடப்பட்டது.

இந்நாளையொட்டி நாடுமுழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

காதி கிராமத் தொழில்கள் ஆணையத்தின் சார்பிலான கொண்டாட்டங்கள் காணொலி வாயிலாக நடைபெற்றன.

இதில் பங்கேற்றுப் பேசிய அதன் தலைவர் திரு. மனோஜ்குமார், கிராமப்புற பொருளாதார வளர்ச்சியில் தேனீ வளர்ப்பு முக்கியப் பங்கு வகிப்பதாக கூறினார்.

காதி கிராம தொழில்கள் ஆணையத்தின் சார்பில் தேன் புரட்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்மூலம், கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு, சுயசார்பு கிராமங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் திரு. மனோஜ்குமார் கூறினார்.

>>>>><<<<<

இந்தியா உட்பட 12 நாடுகளின் கூட்டு ராணுவப் பயிற்சி மேகாலயாவில் இன்று தொடங்கியது.

பூட்டான், கம்போடியா, இந்தோனேஷியா, மலேசியா, மாலத்தீவு, மியான்மர், நேபாளம், பிலிப்பைன்ஸ், ஷீசெல்ஸ், இலங்கை, வியட்நாம், லாவோஸ் ஆகிய நாடுகள் இதில் பங்கேற்றுள்ளன.

இரண்டு வார காலம் நடைபெறவுள்ள இந்த கூட்டு ராணுவப் பயிற்சியில் தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

சில்வர் லைன் ரயில் திட்டத்தை கைவிடுவது என கேரள அரசு முடிவு செய்துள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. V.D. Satheesan கூறியுள்ளார்.

இன்று திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த திட்டத்திற்காக நிலம் கையகப்படுத்துவதற்காக வெளியிடப்பட்ட அறிவிக்கை விரைவில் திரும்பப் பெறப்படும் என்று தெரிவித்தார்.

இதற்கிடையே, புதிய அமைச்சர்களுக்கான இலாகாக்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, திரு. ரமேஷ் சென்னிதலாவுக்கு உள்துறையும், திரு. சன்னி ஜோசப்புக்கு மின்துறையும், திரு. கே. முரளிதரனுக்கு சுகாதாரத்துறையும் திரு. சி.பி. ஜானுக்கு போக்குவரத்து துறையும், திரு. பஷீருக்கு பொதுப்பணித்துறையும், திரு. சித்திக்-கிற்கு வேளாண் துறையும் ஒதுக்கப்பட்டுள்ளன.

>>>>><<<<<

மக்களவை மற்றும் மாநிலங்களின் சட்டப்பேரவை தேர்தல்களை ஒரே நேரத்தில் நடத்துவதற்கு குஜராத் அரசு ஆதரவு அளித்துள்ளது.

இன்று, காந்திநகரில் இதுதொடர்பாக அமைக்கப்பட்ட நாடாளுமன்ற கூட்டுக் குழுவினரிடம், குஜராத் முதலமைச்சர் திரு. புபேந்திர பட்டேல் இதனை தெரிவித்தார்.

இருப்பினும் இந்த நடைமுறைக்கு காங்கிரஸ் தரப்பில் பங்கேற்ற குழுவினர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

>>>>><<<<<

ஆசிய ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Dhairya Gogia இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

சீனாவின் Panzhihua-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 13 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவின் முதல்சுற்று ஆட்டத்தில் அவர் 12-10, 10-12, 11-7, 11-7 என்ற செட்கணக்கில் ஹாங்காங்கின் Tse Ka Chun-ஐ வென்றார்.

13 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் Amarya Bajaj, Abhyuday Arora, Riyaa Dalal, Alia Kankaria ஆகியோரும் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

15 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் Dhruv Johri-யும், 17 வயதுக்குட்டோருக்கான பிரிவில் Hridhaan Shah, Lokesh Subramani, Sivan Agarwal, Raghav Vashishta-வும், 19

வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் Unnati Tripathi, Akansha Gupta ஆகியோரும் இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெறுள்ளனர்.

>>>>><<<<<

18 வயதுக்குட்பட்டோருக்கான 4வது மற்றும் இறுதி மகளிர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா, 4-1 என்ற கோல்கணக்கில் ஆஸ்திரேலியாவை வென்றது

போபாலில் நடைபெற்ற இப்போட்டியில், Sweety Kujur, Diya, Priyanka Minz, Noucheen Naz ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர்.

4 போட்டிகளைக் கொண்ட இந்த தொடரை ஆஸ்திரேலியா 3-1 என்ற ஆட்டக்கணக்கில் வென்றது.

>>>>><<<<<

மலேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Ashmita Chaliha காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-16, 21-13 என்ற செட்கணக்கில் இந்தோனேஷியாவின் Thalita Ramadhani Wiryawan-ஐ வென்றார்.

>>>>><<<<<

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசைப் பட்டியலில், இந்தியாவின் விராட் கோலி 2-வது இடத்திலும், ரோஹித் சர்மா 4-வது இடத்திலும் உள்ளனர்.

>>>>>end<<<<<